நன்மை செய்தார்கள், நாங்கள் எப்படிச் செய்கிறோம் என்பதை யெல்லாம் புள்ளிவிவரங்களோடு நான் சொல்ல வேண்டும். அந்தக் கோப்புக்களை நான் படித்துக் காண்பிக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறேன். (குறுக்கீடு).

திரு. என். சங்கரய்யா : விவாதத்தை நாளைக் காலை தொடர்ந்து வைத்துக்கொள்ளலாம்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : ஒரே ஒரு வேண்டுகோள். எரிசாராயம் போன்றவற்றைப் பற்றி உண்மைக்கு மாறாக இங்கே செய்திகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளுக்கெல்லாம் நான் பதில் சொல்லியாக வேண்டும். நாளைய தினம் நான் பேசி முடிக்கிறவரை எனக்கு வாய்ப்புத் தரவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை (5-2-1981) 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-32 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

6. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

186. அலுவலகப் பணியாளர் தொகுதியிலுள்ள கிராம நிர்வாக அலுவலர் பதவிகளை அரசுத் தேர்வாணைக் கழக வரம்பெல்லைக்குள் கொண்டு வருவது தொடர்பாக தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுத் தேர்வாணைக் கழக விதிமுறைகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளரமைப்பு—நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் [பணியாளரமைப்பு-M) 15—12—1980 ஆம் தேதியிடப்பெற்ற 1224 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

எதுவுமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS